# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 17 இதழ் - 6 ஜுன் - 2004



வெளியிடுவோர்


**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. தமிழ்நாடு. இந்தியா

✆ 04257 - 230030, 230382, Cell : 98427 - 30382

E-mail : kangayamocfc@eth.net

# BIBLE MEDITATION




## ஆசானின் அறிவுரையில்...

1. ஆசிரியர் உரை........................................ 1

2. அஸ்திபாரம் ஏன் முக்கியமானது ? 10

3. பெண்கள் பகுதி........................................ 16

4. வாலிபர் பகுதி........................................ 20

5. சிறுவர் பகுதி........................................ 24

6. I பேதுரு ஒரு கண்ணோட்டம்........................ 27

7. விசுவாசத்தின் அடிப்படைகள்........................ 28

# THIRUMARAI AASAAN

*Published by Church of Christ*

**S. Rajanayagam** *Editor* — **J.C. Choate** *Honorary Editor*

Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 17 June - 2004 Issue - 6


ஆசிரியர் உரை

## ஆபிரகாமும், அபிமலேக்கும்

"தேவனுடைய சிநேகிதன்" என்ற சிறப்புக்கும், "விசுவாசிகளின் தகப்பன்" என்ற அந்தஸ்துக்கும், "முற்பிதாக்களில் முதலாமவர்" என்ற சிலாக்கியத்திற்கும் சொந்தக்காரனாகிய ஆபிரகாம் பற்றிய அநேக காரியங்களைப் பல தேவதாசர்கள் மூலமாக நாம் கேட்டும், வாசித்தும் இருக்கிறோம். இந்த ஆபிரகாமைப் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது என்று யாராவது சொன்னால், அப்படிப்பட்டவன் ஒரு கிறிஸ்தவன் என்று அழைக்கப்படுவதற்கே லாயக்கற்றவன் என்று நாம் சுத்தமாக ஒதுக்கி விடலாம். ஏனெனில், இத்தேவ மனிதனுடைய பற்பல அருங்குணங்கள், விதவிதமான கோணங்களில், எண்ணற்ற தேவ மனிதர்களால் எடுத்தியம்பப்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட ஆபிரகாமுடைய வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தை ஆதாரமாக வைத்தே, இம்மாதத்தில் சில காரியங்களைக் கற்றுக் கொள்ள இருக்கிறோம். ஒருவேளை, நாம் பார்க்க இருக்கும் காரியம் எப்பொழுதும் போல ஆபிரகாமுக்குப் பெருமை சேர்க்கும் ஒன்றாக இல்லாவிட்டாலும், பாரபட்சமற்ற நமது தேவன், அதை ஒரு நோக்கத்தோடு வேதாகமத்தில் இடம் பெறச் செய்திருக்கிறபடியால், நமக்குப் பயன்படும் ஒரு சம்பவமாகவே அது உள்ளது. அப்போஸ்தலன் பவுல் உரோமையருக்குச் சொல்லும்போது, "தேவ வசனத்தினால் உண்டாகும்

பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும் படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது". (ரோம 15:4) என்கிறார். ஆகவே, ஆதி. 20-ம் அதிகாரத்துச் சம்பவம் நமக்கு எப்படிப்பட்ட போதனைகளைக் கொடுக்கிறதென்று கீழே பார்ப்போம்.

அதற்கு முன்பாக, உயர்ந்த மனிதனாகிய ஆபிரகாமைக் குறித்தான நமது எண்ணத்தில், இச்சம்பவத்தினடிப்படையில் பழுது எதுவும் பெரிதாகத் தோன்றிவிடாமலிருக்க, அவன் வாழ்ந்த காலத்துச் சூழலைக் கொஞ்சம் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஆம், ஆபிரகாமின் நாட்கள் பஞ்சத்திற்கும், பஞ்சத்தினிமித்தம் குடிபெயர்தலுக்கும் பெயர் போனது (ஆதி 12:9,10) அது மாத்திரமல்ல, ஒழுக்கக் கேடும் உச்சத்திலிருந்த தாகவே தெரிகிறது. சோதோம் கொமோராவின் பாவம் கொடிதாகவும், அதின் கூக்குரல் தேவ சமூகத்தை எட்டுவதாகவும் இருந்துள்ளது. (ஆதி 18:20,21) இது போதாதென்று, ஆட்சியாளர்களும் கொடுங் கோன்மையும், சர்வாதிகாரமும் உடையவர்களாக இருந்துள்ளனர். கட்டின மனைவிக்கே உத்திரவாதமில்லை என்ற பரிதாப நிலையே அந்நாட்களில் இருந்திருக்கிறது. நாம் வாழும் இந்தக் காலம் தான் மோசம் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்கு, ஆபிரகாமின் காலம் கொஞ்சம் ஆறுதலான விஷயமாக இருக்கும் என நம்புகிறேன்.

இப்பொழுது, ஆபிரகாம், அபிமலேக்கு சம்பவத்திற்குள்ளாகப் போவோம். சோதோமின் அழிவிலிருந்து லோத்துவையும், அவன் குடும்பத்தையும் காப்பாற்ற தேவனிடம் கெஞ்சி மன்றாடின ஆபிரகாம், பிறகு தன் மனைவியாகிய சாராளை அழைத்துக் கொண்டு, தென் தேசத்துக்குப் பிரயாணம் பண்ணி, காதேசுக்கும், சூருக்கும் நடுவாகக் குடியேறி கேராரிலே தங்கினான் (20:1) அந்த தேசத்து மனிதர்களிடம் தெய்வ பயம் இல்லையென்று இவனாகவே தீர்மானித்துக் கொண்டு, மனைவி சாராளை, "சகோதரி சாராள்" என்று பொய் சொல்லி விடுகிறான் (வச 11) இவன் சொன்ன வார்த்தையை நம்பின ராஜாவாகிய அபிமலேக்கு, சாராளைத் தனக்கு மனைவியாக்கிக் கொள்ள அழைத்தனுப்பினான். அன்று இரவே, கர்த்தர் சொப்பனத்தில் தோன்றி, வாக்குத்தத்த சந்ததியைக் கொண்டு வரவேண்டிய சாராளை, அபிமலேக்கு கிட்ட நெருங்கிவிடாதபடி, "நீ செத்தாய்" என்று கடுமையான வார்த்தைகளால் எச்சரித்தார்.

பயந்து நடுங்கிப்போன கேராரின் ராஜாவாகிய அந்த அபிமலேக்கு, அவர்களிருவரும் ஒருமித்துச் சொன்ன வார்த்தையினடிப்படையில்,

"உத்தம இருதயத்தோடும், சுத்த கைகளோடும் இதைச் செய்தேன் என்று மன்றாடினான்." (20:4,5) பிறகு, தேவ கட்டளைப்படி, ஆபிரகாமின் மனைவியாகிய சாராளை அனுப்பிவிடத் தீர்மானித்து, "பொய் ஆபிரகாமை" அழைப்பித்து, "நீ எங்களுக்கு என்ன காரியம் செய்தாய், நீ என்மேலும் என் ராஜ்யத்தின் மேலும், கொடிய பாவம் சுமரப் பண்ணுகிறதற்கு உனக்கு நான் என்ன குற்றம் செய்தேன்? செய்யத்தகாத காரியங்களை என்னிடத்தில் செய்தாயே" என்றும், என்னத்தைக் கண்டு இந்தக் காரியத்தை நீ செய்தாய் என்றும் கூறி, கண்டனம் பண்ணியதோடு (வச 9,10) நிற்காமல், சாராளை நோக்கி **உன் சகோதரனுக்கு,** ஆயிரம் வெள்ளிக்காசு கொடுத்தேன். இதோ, உன்னோ டிருக்கிற எல்லார் முன்பாகவும், மற்ற யாவர் முன்பாகவும், இது உன் முகத்து முக்காட்டுக் காவதாக என்று கடிந்து கொண்டான் (வச 16) இங்கே ஆபிரகாமும், சாராளும், தீமைக்கு ஒரு மனப்பட்டதைக் கண்டு, அந்நிய ராஜாவாகிய அபிமலேக்கு பலமாக இடித்து அனுப்புகிறான். இங்கே, ஆபிரகாம் சாராளின் செயல், நமக்கு புதிய ஏற்பாட்டு அனனியா, சப்பீராளை நினைவுபடுத்துகிறது.

## I மனித பெலவீனமும், தேவனுடைய பொறுமையும் :

ஆபிரகாம், அபிமலேக்கு சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், பொதுவாக மனிதன் பெலவீனமுள்ளவனென்பதும், அவனுடைய பெலவீனத்தில் தேவன் பொறுமையுள்ளவராயிருந்து காரியங்களை நடப்பிக்கிறார் என்பதுமே.

பரலோகத்தின் தேவனுடைய அழைப்பை ஏற்று தன் தேசத்தையும், தன் இனத்தையும், தன் தகப்பன் வீட்டையும் விட்டு, தான் முன்பின் அறியாத தூர தேசமாகிய கானானுக்கு விசுவாசத்தோடு வந்த ஆபிரகாம், தென் தேசமாகிய கேராருக்குப் போனபோது தடுமாறுகிறான். தன் மனைவியைத் தன் சகோதரி என்று சொல்லுகிறான் (20:2) இது விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு ஏற்பட்ட முதல் சறுக்கு அல்ல. சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பாக, அப்பொழுது ஏற்பட்ட பஞ்சத் தினிமித்தம் எகிப்துக்குத் தன் மனைவியாகிய சாராளோடு சென்ற ஆபிரகாம், எகிப்தின் ராஜாவாகிய பார்வோனிடத்திலும் இதுபோலவே நடந்து கொண்டான். (ஆதி 12:10-13). இன்னும், பலதார மணம் வழக்கமாகிப் போன அந்த நாட்களிலேயே, ஏகபத்தினி விரதனாக இருந்த ஈசாக்கு கூட, ஒரு கட்டத்தில் இதே விதமான தவறையே செய்திருக்கிறான் (ஆதி 26:7) இவைகளெல்லாம், பொதுவாக மனிதன் பலவீனமுள்ளவனாகவே இருக்கிறான் என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறது. அத்தோடு, விசுவாசிகளின் பட்டியலில் சிறப்பான இடம்

பெற்ற இம்மாமனிதர்களே சில வேளைகளில் தடுமாறியிருக்கிறார்கள் என்பதையும் நமக்குச் சொல்கிறது.

ஆனாலும், நம்முடைய தேவன் மிகுந்த பொறுமை காத்து, இவர்களுடைய பெலவீனங்களில் இவர்களைத் தாங்கி வழிநடத்தி வந்திருக்கிறார். அவர் தான் நம்முடைய தேவன். வேதாகமம் எங்குமே மன்னிப்புக்கு எண்ணிக்கையோ, எல்லையோ நம் தேவன் வகுப்பதில்லை. ஒருமுறை தான் மன்னிப்பேன், இரண்டு முறை தான் மன்னிப்பேன், அதற்குமேல் "நீ அவுட்" என்று அவர் சொல்லுவது மில்லை. இரண்டு முறைக்கு மேல் மன்னிப்பு இல்லையென்ற நிலை இருந்திருக்குமானால், மூன்று முறை மறுதலித்த நம்முடைய பேதுரு அவுட். அவன் அப்படி அவுட் ஆகியிருந்தால், பெந்தெகொஸ்தே நாள் பிரசங்கம் எங்கே? 3000 பேரின் இரட்சிப்பு எங்கே? இன்னும் அதைத் தொடர்ந்து நடைபெற்ற ஊழியக் காரியங்கள் எங்கே? நான் இப்படிச் சொல்லும் போது, தேவன் அதற்கு வேறு ஒரு திட்டம் வைத்திருப்பார் என்று நீங்கள் சொல்லக்கூடும். அது உண்மை தான். நானும் அதை அப்படியே ஒத்துக்கொள்கிறேன். ஒன்றுமில்லாமையிலிருந்து எல்லாவற்றையும் உருவாக்கின தேவாதி தேவன், பேதுருவுக்கு ஒரு மாற்றை ஏற்படுத்துவது இலேசான காரியமே. ஆனால், வல்லமையுள்ள மனிதனாகிய பேதுரு தன் அழைப்பில் விழுந்து, நித்தியத்தை இழந்து போயிருப்பான் தானே. தேவன் நம்மிடத்தில் பொறுமையாயிருந்து, நாம் நித்திய இரட்சிப்பை பெற உதவுகிறார் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்? நாம் கெட்டுப் போகாமலிருக்க தேவன் பொறுமை காட்டுகிறார் என்பதை இதே பேதுரு எங்ஙனம் கூறுகிறார் பாருங்கள். "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல், எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் **நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்**"(II பேது. 3:9).

நம்முடைய தேவன் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார் என்று வேத வசனம் நமக்கு அழகாக எடுத்துச் சொல்லுகிறது (ஏசா 55:7) இன்னும், எபிரெய ஆசிரியர், நம்முடைய இரட்சகரும், மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி இவ்விதம் சொல்லுகிறார். "நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப் போல சோதிக்கப்பட்டும், பாவமில்லதாவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்" (4:15) மேலும், அப்போஸ்தலன் பவுல், இக்காரியத்தில் பரிசுத்த

ஆவியானவரின் பங்கு பற்றி உரோமையருக்கு எழுதும் போது, "அந்தப்படியே, ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார் (ரோம 8:26) என்கிறார்.

ஆக, நம்மைப் படைத்த தேவனும், நம்மை இரட்சிக்கும் இயேசு கிறிஸ்துவும், கிறிஸ்துவின் உபதேசங்களுக்குக் கீழ்ப்படிகிறவர்களுக் குள்ளாகத் தங்கி வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவரும் நம்முடைய பெலவீனங்களில் நமக்கு உதவி செய்வது எவ்வளவு பெரிதும், சிறப்புமான காரியம் என்று எண்ணிப்பாருங்கள் !.

அருமையான வாசகரே, ஆபிரகாமின் பெலவீனத்தைப் படிக்கும் நாம், நம்முடைய தவறுகளுக்கு, ஆபிரகாமின் பெலவீனத்திற்குள்ளாக சென்று அடைக்கலம் புகுந்து விடாமல், ஆபிரகாம் பின்னாளில், மிகுந்த பெலன் பெற்று, தேவனுடைய நிரந்தர அங்கீகாரத்தையும், வேதவசனங்களின் சிறப்பான அலங்காரத்தையும் பெற்று, உன்னத வாழ்வு வாழ்ந்திருக்கிறான் என்பதை அறிந்து அதன் அடிப்படையில் நமது காரியங்களை ஒழுங்குபடுத்துவோம்.

## II பொய்யும், பொய்யின் பாதிப்பும்

ஆபிரகாம், அபிமலேக்கு சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாம் பாடம், ஒருவன் பேசும் பொய், மோசமான பாதிப்பையும், கடும் விளைவுகளையும் ஏற்படுத்தும் என்பது.

நாம் வாழும் இந்த நாட்களில் பெரிய குற்றங்களாகக் கருதப்படும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்றவைகள் கூட சர்வ சாதாரணமாகிப் போனபடியால், "பொய்" போன்ற பாவங்கள், ஒரு குற்றமாகவே கருதப்படுவதில்லை. ஒருவேளை, ஆபிரகாமின் நாட்களிலும் நிலைமை அப்படித்தான் இருந்திருக்குமோ?! தேவ அழைப்பை உடனடியாக ஏற்றுக் கீழ்ப்படிந்த ஆபிரகாம், சூழ்நிலையினிமித்தமாகப் பொய் பேசினபடியால், அப்படிப் பேசுவது தவறில்லை என்று எண்ணியிருப்பானோ? ஒரு வேளை, ஆபிரகாம் எப்படி எண்ணியிருந்தாலும், நம்மைப் போன்றவர்களும், நம்முடைய நாட்களில் வாழும் ஏனையோரும், எப்படி எண்ணினாலும்,தேவன் பொய்யைக் குறித்து நாம் எண்ணுவது போல எண்ணுவதில்லை. "தீமையைப் பார்க்கக் கூடாத சுத்தக் கண்ணனாகிய நமது தேவன்" (ஆபகூக் 1:15). தீமையை தீமையாகவே பார்த்தார். தீமையை செய்தது யார் என்றும், எந்தச் சூழ்நிலையில் செய்தார்கள் என்றும் பார்க்காமல், நடந்ததை நம்முடைய மாறாத நீதியின்படியும், குன்றாத பரிசுத்தத்தின்

படியாகவுமே பார்த்தார். நாம் ஒவ்வொருவரும் தீமையை எப்படிப் பார்க்கிறவர்களாக உள்ளோம்?.

ஆபிரகாம், "இவள் என் சகோதரி" என்று பேசின மூன்று வார்த்தைப் பொய்யின் பாதிப்பு, அதன் விளைவு எவ்வளவு பயங்கரமாயிருந்தது என்று தயவு செய்து கவனியுங்கள். ஆம், ஆபிரகாமின் பொய், அபிமலேக்குக்கும், அவனைச் சேர்ந்த யாவருக்கும் சாவை கொண்டு வரக்கூடியதாக இருந்தது. "நீ செத்தாய்" என்று மூன்றாம் வசனமும், "நீயும், உன்னைச் சேர்ந்த யாவரும் சாகவே சாவீர்கள்" என்று ஏழாம் வசனமும் சொல்லுகிறது. அது மாத்திரமல்லாமல், 9-ம் வசனம் ஆபிரகாமின் பொய் , இராஜ்ஜியத்தின் மீதே குற்றம் சுமரச் செய்தது என்று கூறுகிறது. அத்தோடு கூட, ஆபிரகாமையும், சாராளையும் தேவனை அறியாத ராஜாவாகிய அபிமலேக்கு கடிந்து கொண்டது, அவர்களிருவருக்கும் வெட்கத்தைக் கொண்டு வந்தது (20:16). நம்மாலே, "சாதாரணம்" என்று கருதப்படுகிற பொய், தனிமனிதனுக்கு, ஒரு குடும்பத்திற்கு, ஏன் ஒரு தேசத்திற்கு பயங்காரத்தையும், தேவனாலே தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு குடும்பத்திற்கு அவமானத்தையும் கொண்டுவரக் கூடியதாக இருந்தது. இதற்கு மேல், ஒரு பொய் என்ன கேடு செய்ய வேண்டுமென்று நினைக்கிறீர்கள்? இது போதாதா? இனிமேலும் நாம் பொய்யை சாதாரணமாகக் கருதப்போகிறோமா? சொல்லுங்கள் !.

பொய்யின் வலிமையையும், அதன் மூலம் ஏற்படும் தீமையையும் அறிந்து வைத்திருந்தபடியால், சங்கீதக்காரன் **"கர்த்தாவே பொய் உதடுகளுக்கும், கபட நாவுக்கும் என் ஆத்துமாவைத் தப்புவியும் என்றும், கபட நாவே, உனக்கு என்ன கிடைக்கும்? உனக்கு என்ன செய்யப்படும்? பலவானுடைய கூர்மையான அம்புகளும், சூரைச் செடிகளை எரிக்கும் தழலுமே கிடைக்கும்"** என்று பாடியுள்ளான் (சங் 120:2-4) மேலும், தேவன் அருவருக்கும் ஏழு காரியங்களில் "பொய்யும்" ஒன்று என்று ஞானி சாலமோன் கூறுகிறார் (நீதி 6:17) இதைவிட நமக்கெல்லாம் மிகுந்த எச்சரிப்புண்டாகும் படியாக, ஆவியானவர், யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தில் "பொய்யர்" இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்கிறார். (வெளி 21:8)

மொத்தத்தில் "பொய்" இந்த வாழ்க்கையை மாத்திரம் அழிக்கக் கூடியதாக இல்லாமல், நம்முடைய நித்திய வாழ்வையும் நாசம் செய்யக்கூடியதாக இருக்கிறது. நம்முடைய பக்திக்காகவும், பரலோக

பாக்கியத்துக்காகவும் நாம் செய்கிற அனைத்து முயற்சிகளையும், ஒரே ஒரு பொய், ஒன்றுமில்லாமல் செய்துவிடும் என்பதை எப்பொழுதாவது உணர்ந்திருக்கிறீர்களா? இதுவரைக்கும் உணராமலிருந்தால் இப்பொழுதாவது உணர்ந்து திருந்துங்கள்.

இன்னொன்றையும் மனதிலே வைத்துக்கொள்ளுங்கள். ஒரு பொய்யினாலே, நன்மை வருமானால், அப்படிப்பட்ட பொய் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதே என்ற நவீன காலத்து கருத்தும் தள்ளுபடியாகக் கூடியதே. ஏனெனில், அது சரியென்றால், ஆபிரகாம் செய்ததும் சரி. ஆனால், ஆபிரகாம் செய்தது சரியென்று வேதவசனங்கள் நமக்குச் சொல்லாததால், இக்கருத்தின் அஸ்திபாரம் அடியோடு தகர்க்கப்படுகிறது.

ஆகவே, அருமையானவர்களே, நாம் நூதனமானவைகளுக்குச் செவிகொடாமல், வேதத்துக்கு மாத்திரம் செவி கொடுத்து, இயேசுவானவர் உபதேசத்திருப்பது போல "உள்ளதை உள்ளதென்று சொல்லுவோம்" (மத் 5:37) மற்றும்"பொய்யைக் களைந்து எல்லாரோடும் உண்மையை மாத்திரம் பேசுவோம்" (எபே 4:25).

## III அறியாமை மன்னிப்புக்கேதுவானதல்ல :

ஆபிரகாம், அபிமலேக்கு சம்பவம் நமக்குத் தரும் மூன்றாவதும், முக்கியமானதுமான பாடம், அறியாமை மன்னிப்புக்கேதுவானதல்ல என்பது.

ஆபிரகாம், அபிமலேக்கு சம்பவத்தை நாம் கவனித்தால், ஆபிரகாமின் மனைவியை எடுத்துக் கொண்ட அபிமலேக்கிடம் தேவன் சொப்பனத்திலே கடிந்து கொண்டபோது, அவன் ஆண்டவரை நோக்கி, ..... **இவள் தன் சகோதரி என்று அவன் என்னோடே சொல்லவில்லையா? அவன் தன் சகோதரன் என்று இவளும் சொன்னாளே; உத்தம இருதயத்தோடும் சுத்தமான கைகளோடும் இதைச் செய்தேன் என்றான்.** (20:5) தேவனும் அபிமலேக்கிடம், "உத்தம இருதயத்தோடே நீ இதைச் செய்தாய் என்று நான் அறிந்திருக்கிறேன்" என்றார்.

இங்கே நாம் கவனிக்கும் பொழுது, ஒது தவறு நடக்கிறது. ஆம், மாற்றானுடைய மனைவி அபகரிக்கப்படுகிறாள். அந்தத் தவறு உத்தம இருதயத்தோடு நடக்கிறது. ஆம், அப்படித்தான் நடந்தது என்று தேவனும் சாட்சி கொடுக்கிறார். செய்வது தவறு என்று தெரியாமல், அபிமலேக்கு அந்தக் காரியத்தைச் செய்திருந்தாலும் கூட, தேவன் அதை மன்னிப்புக்கு ஏதுவானதாகக் கருதாமல், தண்டனைக்கு ஏற்றதாகவே எண்ணியிருக்கிறார். இங்கே, அநேகராகிய நம்முடைய பார்வையில்

மன்னிப்புக்கு உகந்ததாகத் தெரிவது, தேவனுடைய பார்வையில் கடுமையான தண்டனைக்கு உரியதாயிருந்திருக்கிறது. அப்படியானால், யார் சரி? நாமா அல்லது தேவனா? ஏதாவது சந்தேகம் இருக்கிறதா? சொல்லுங்கள்.

இன்றைய கிறிஸ்தவ உலகம், இங்கே மறைந்திருக்கும் ஓர் உண்மையை பகிரங்கமாக அறிந்து ஏற்றுக்கொள்வது அத்தியாவசிய மானதாயிருக்கிறது. ஆன்மீக ரீதியாக நாம் செய்கின்ற காரியங்கள் நம்முடைய பார்வையில் எப்படிப்படுகிறது என்பதைவிட தேவனுடைய சமூகத்தில் அது எப்படியிருக்கிறது என்பது மிகவும் முக்கியம். மேலும், நாம் ஒரு காரியத்தை அறிந்து செய்கிறோமா அல்லது அறியாமல் செய்கிறோமா என்பது முக்கியமல்ல, மாறாக, நாம் செய்வது நீதியானதா, தேவனுடைய வார்த்தைகளின்படி அவர் அங்கீகாரத்தைப் பெறக்கூடியதா என்பதே முக்கியமானது. நம்மில் எத்தனை பேர் இந்த உண்மையை அறிந்து ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.?

அறியாமல் செய்வதெல்லாம் மன்னிப்புக் கேதுவானதெனில், இயேசுவைக் கொலை செய்தவர்களுக்கு மன்னிப்பு தானாகவே கிடைத்திருக்க வேண்டும் தானே! "யூதர்களும், அவர்கள் அதிகாரிகளும் **அறியாமையினாலே** அதைச் செய்தார்களென்று தானே பேதுரு கூறுகிறார் (அப் 3:17) "அறியாமல் குற்றம் செய்த அவர்களுக்கு எதற்கு ஒரு "பிரசங்கம்" அவர்களுக்கு எதற்கு "மனந்திரும்புங்கள்" என்ற வேண்டு கோள், அவர்களுக்கு எதற்கு "பாவமன்னிப்புக்கான ஞானஸ்நானம்" சொல்லுங்கள், இவைகளெல்லாம் எதற்கு? இங்கே ஒன்றைத் தெரிந்து கொள்ளுங்கள்; அறியாமை என்பது மன்னிப்புக்கு ஏதுவானதல்ல.

அப்போஸ்தலன் பவுல் தன்னுடைய பழைய வாழ்க்கையைக் குறித்துச் சொல்லும்போது, தான் முன்னே தூஷிக்கிறவனும், துன்பப்படுத்து கிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தது **"அறியாமல் நடந்தது"** என்று தீமோத்தேயுவுக்கு கூறுகிறார். (Iதீமோ 1:13) அப்படி அறியாமல் காரியம் செய்திருந்தவனை இயேசு சந்தித்தபோது, அவனை அப்படியே ஏற்றுக்கொண்டாரா? உடனே என் ஊழியத்துக்குப் போ என்றாரா? இல்லைதானே! "நீ எழுந்து பட்டணத்துக்குப் போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்" என்றுதானே கூறப்பட்டது (அப் 9:6) அங்கே இயேசு அவன் அறியாமையை மன்னிப்புக்கேதுவானதாகக் கருதாமல், அவன் அறிந்து செய்ய வேண்டிய காரியங்கள் உண்டென்றே சொன்னார். மறுபடியும் சொல்லுகிறேன் அறியாமை மன்னிப்புக்கு ஏதுவானதல்ல.

இதைவிட பவுலடியார், தெசலோனிக்கேயருக்குச் சொல்லும் போது **தேவனை அறியாதவர்களுக்கும்,** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினை உண்டு" என்கிறார். (IIதெச 1:7), அறியாமை மன்னிப்புக்கு ஏதுவானதாக இருந்தால் "தேவனை அறியாதவர்களுக்கு" எதற்கு ஆக்கினை? தேவன் அநீதிக்காரரா? சிந்தியுங்கள்.

அருமையானவர்களே! அறியாமை மன்னிப்புக்கானதல்ல என்பது உண்மையானால், "தேவனை நேசிக்கும் ஒவ்வொருவரும், தேவகாரியங்கள் அனைத்தையும் அப்படியே அறிந்திருக்க வேண்டியது அவசியமாகிறது. பரலோகம் செல்லுவதற்குத் தேவையான அனைத்துக் காரியங்களிலும் பரிச்சயம் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகிறது. அப்படித்தானே? அப்படியானால் நாம் அப்படியிருக்கிறோமா? ஒருவேளை, நீங்கள் ஆன்மீக வாழ்க்கையில், தேவன் தமது குமாரனைக் கொண்டு கட்டின உண்மையான சபை எது என்றும், தேவன் ஏற்றுக்கொள்ளும் உண்மையான ஆராதனை எது என்றும், இயேசுவின் நாமத்தின்படியான உண்மையான இரட்சிப்பு எது என்றும், அந்த இரட்சிப்புக்கு முன்பாக ஒருவன் செய்ய வேண்டுவது என்ன என்றும் அறியாமல் இருப்பீர்களானால் தேவன் கொடுக்கும் எச்சரிப்பைப் பாருங்கள் "**அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருக்கிறார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்**". (அப் 17:30)

இங்கே, கொடுக்கப்பட்டிருக்கும் தேவகட்டளைக்கு நாம் யாரும் எதிர்த்து நிற்காமல், கிறிஸ்துவின் உபதேசங்களடங்கிய புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்குக் கீழ்ப்படிந்து, இம்மையில் கிறிஸ்துவுக்குள்ளான சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், மறுமையில் நித்திய ஜீவனையும் பெற்றுக் கொள்வோமாக! ஆமென்.

**E.Z.S. ராஜநாயகம்**

**இரட்சிப்பின் படிகள் :**

| | |
|---|---|
| 1. **கேள்விப்படுதல்** | (ரோமர் 10:17) |
| 2. **விசுவாசித்தல்** | (மாற்கு 16:16) |
| 3. **மனந்திரும்புதல்** | (அப். 2:38) |
| 4. **அறிக்கையிடுதல்** | (ரோமர் 10:9, 10) |
| 5. **ஞானஸ்நானம்** | (அப். 22:16) |

# அஸ்திபாரம் ஏன் முக்கியமானது ?

இந்த உலகத்தில் வீடுகளோ, அடுக்குமாடிக் கட்டிடங்களோ கட்டும் போது அல்லது அதிக நாட்கள் நிற்க வேண்டுமென்ற ஏதோ ஒன்று எழுப்பப்படும் போது சரியான அஸ்திபாரம் போட்டு கட்டுவது முக்கிய மானதாகும். நாம் நம்முடைய வேலையில் சிறந்தவர்களாக திகழ வேண்டு மென்றாலும், அதற்கு நாம் முன்கூட்டியே ஆயத்தம் செய்ய வேண்டும். நல்ல பயிற்சி மேற்கொள்ள வேண்டும் என்பதை நாம் அறிவோம். நாம் அஸ்திபாரம் போடுவது பற்றியும், ஆயத்தப்படுவது பற்றியும் அசட்டையாக இருப்போமானால் கடினமான காலத்தை நாம் எதிர்நோக்குகிறோம் என்று பொருள்.

நல்ல ஆவிக்குரிய அஸ்திபாரம் தேவை என்பதை வலியுறுத்த இரண்டு உதாரணங்கள் எடுத்துரைத்தார், அதில் ஒருவன் கற்பாறையின் மேல் கட்டினவன் மற்றவன் மணலின் மேல் கட்டினவன். இயேசு சொல்லும் போது, "ஆகையால் அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து அந்த வீட்டின் மேல் மோதியும் அது விழவில்லை. ஏனென்றால், அது கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின் மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின் மேல் மோதின போது அது விழுந்தது, விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்." (மத் 7:24-27)

மேற்சொன்ன வசனப்பகுதியில் இயேசு இப்பூமிக்குரிய கட்டுமானப் பணி செய்கிறவர்களில் இரண்டு பேரை வேறுபடுத்தி காட்டுகிறார். ஒருவன் புத்தியுள்ளவன் மற்றொருவன் புத்தியற்றவன். கிறிஸ்து சொல்லுவதை கேட்டு அதன்படி செய்கிறவனை புத்தியுள்ள ஆவிகுரிய கட்டட கலைஞன் என்றும் கூறுகிறார். அவன் புத்தியுள்ளவன், ஏனெனில், கர்த்தருக்குக் கீழ்ப்படிவதின் மூலம் அவன் கிறிஸ்துவின் மேல் கட்டுகிறான். பாரம்பரியம், கலாச்சாரம், உலகக் காரியங்கள், மனிதப் போதனைகள் ஆகியவைகளை ஆராயந்து தோண்டி கிறிஸ்துவையும் அவரின் போதனையையும், வழியையும் கண்டுபிடித்து, அதில் கட்டுகிறான். அதன் பலனாக அவன் ஸ்திரமுள்ள அஸ்திபாரத்தின் மேல் கட்டுகிறான். சத்தியம் அவனிடமிருக்கிறது. கிறிஸ்து அவனோடு இருக்கிறார். அவன் ஒரு

கிறிஸ்தவன். அவன் கர்த்தருடைய சபையின் அங்கத்தினன். அவனை ஒன்றும் அசைக்காது. அவன் பற்றிக்கொள்ள ஒன்று இருக்கிறது. நித்திய ஜீவன் என்னும் நம்பிக்கை அவனுக்கு இருக்கிறது.

இயேசு பேசுகிற மற்றொருவனோ புத்தியில்லாதவன். அவன் கிறிஸ்து சொல்லுவதைக் கேட்கிறான். ஆனால் அதற்கு அவன் கீழ்ப்படிவதில்லை. அவன் அதை விசுவாசிக்கவில்லை. ஒரு வேளை அதிக நேரம் நமக்கு இருக்கிறது என்று நினைத்திருக்கலாம். நான் நன்றாகவே இருக்கிறேன் என்று கூட அவனுக்குள் நினைத்திருக்கலாம். அல்லது அவன் மனித போதனையை நாடிச் சென்றிருக்கலாம். என்ன பிரச்சினையாக இருந்தாலும் அவன் கர்த்தருக்குக் கீழ்ப்படிய மறுக்கிறான். ஆகவே அவன் இறுதியாக கட்டுகிறது அவனைத் தாங்கிப்பிடிப்பதில்லை, அவன் இழந்தவனாக காணப்படுகிறான், நித்தியத்திற்கும் இழந்தவனாக காணப்படுகிறான்.

வெகு காலத்திற்கு முன்பாக ஏசாயா தீர்க்கன், கர்த்தர் சீயோனிலே அஸ்திபாரக் கல்லை வைப்பார் என்று முன்னுரைத்தார். அந்தக் கல் கிறிஸ்துவாக இருக்கிறார். அந்தக் கல் எருசலேமிலே வைக்கப்படும். நாம் இப்போது தீர்க்க தரிசனத்தை வாசிப்போம். ஏசாயா சொல்லுகிறார் "ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது இதோ அஸ்தி பாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன். அது பரீட்சிக்கப் பட்டதும், விலையேற்றப்பெற்றதும் திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக் கல்லாயிருக்கும் விசுவாசிக்கிறவன் பதறான்" (ஏசாயா 28:16) அந்த அஸ்திபாரத்தின் விவரிப்பைக் கவனியுங்கள் அது ஒரு கல், விலையேறப்பெற்ற மூலைக்கல், திட அஸ்திபாரமான கல், இந்த விவரிப்புகள் எல்லாம் புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவை குறிக்கக் கூடியதாக இருக்கிறது. ஆனால், சங்கீதக்காரனும் 118:22,23-ல் இதைக் குறித்து எழுதியிருக்கிறார். "வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று அது கர்த்தராலே ஆயிற்று அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. இவைகளும் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவுக்குள் புதிய ஏற்பாட்டில் நிறைவேறுகிறது.

இயேசுவின் நாட்களுக்கு நாம் திரும்பி, வாசிக்கையில் "இயேசு அவர்களை நோக்கி வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கலாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? (மத் : 21:42) லூக்கா20:17,18-ல் வேதபாரகர், பிரதான ஆசாரியர் ஆகியோரிடம் பேசும் போது இயேசு சொன்னார்

"அப்பொழுது அவர் அவர்களைப்பார்த்து, வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று என்று எழுதியிருக்கிற வேதவாக்கியத்தின் கருத்தென்ன? அந்தக்கல்லின்மேல் விழுகிறவன் எவனோ அவன் நொறுங்கிப்போவான்; அது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப் போடும் என்றார். ஒரு கல்லை அல்லது பாறையை நாம் அஸ்பாரத் திற்காக பயன்படுத்தலாம், ஆனால் யாராவது ஒருவர் அதிலே தடுக்கி விழுந்தால் அவர்கள் கை அல்லது கால் உடைபடும் அல்லது அவர்கள் மரித்துப்போவார்கள். அது போலவே அது யார் மேலாவது விழுந்தால் அது அவனைக் கொன்றுபோடும். வேறு வார்த்தையில் சொன்னால், சரியாக அது பயன்படுத்தப்பட்டால் அது ஆசீர்வாதமாக இருக்கும். ஆனால் அதை கவனிக்காமலோ அல்லது அதை தவறாகவோ பயன்படுத்தினால் அது ஓர் அழிவு சக்தியாக மாறிவிடும். அதுபோலவே ஆவிக்குரிய பாதையாகிய கிறிஸ்துவும் இருப்பது உண்மை.

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் பேதுரு, பிரதான ஆசாரியர், அதிகாரிகள், வேதபாரகர் ஆகியோரிடம் சுகமாக்கப்பட்ட ஒருவனைப்பற்றி பேசுகையில் "உங்களால் சிலுவையில் அறையப்பட்ட வரும் தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாக சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது வீடுகட்டு கிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக் கல்லானவர். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றார். (அப் 4:10-12) பவுல் இஸ்ரவேலர்கள் அல்லது யூதர்கள் பற்றி கூறுகையில், "நீதிப்பிரமாணத்தைத் தேடின இஸ்ரவேலரோ நீதிப்பிரமாணத்தை அடையவில்லை, என்னத்தினாலென்றால், அவர்கள் விசுவாசத்தினாலே அதைத் தேடாமல், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடினபடியால் அதை அடையவில்லை; இடறுதற்கான கல்லில் இடறினார்கள். இதோ இடறுதற்கான கல்லையும், தவறுதற்கான கன்மலையையும் சீயோனில் வைக்கிறேன்; அவரிடத்தில் விசுவாசமா யிருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று எழுதியிருக்கிற படியாயிற்று. (ரோமர் 9:31-33) இங்கே பவுல் ஏசாயா 28:16 ரை மேற்கோள் காட்டிப் பேசுகிறார்.

யார் அஸ்திபாரம் அல்லது யார் கற்பாறை என்று பவுல் சொல்லும் போது, "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை

அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது". (Iகொரி 3:11) மோசேயின் நாட்களில் இஸ்ரவேலர்களைப் பற்றி பவுல் கூறும் போது "எல்லாரும் ஒரே ஞான போஜனத்தைப் புசித்தார்கள், எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடே சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக்கன்மலை கிறிஸ்துவே". (Iகொரி 10:3,4)

எபேசுவிலுள்ள கிறிஸ்தவர்களிடத்தில் பவுல் பேசும் பொழுது, "ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார், அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள் (எபே 2:19-22)

இங்கே, இந்த அப்போஸ்தலன், கிறிஸ்தவர்கள் எப்படி தேவனுடைய வீடாக அல்லது குடும்பமாக அதாவது சபையாக, அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிகள் ஆகியோரின் போதனையின் மீது இயேசு கிறிஸ்துவை மூலைக்கல்லாக கொண்டு கட்டப்பட்டு வருகிறார்கள் என்று கூறுகிறார். பொதுவாக இந்த அஸ்திபாரம் மட்டும் முக்கியமானது அல்ல, அஸ்பாரத்தில் மூலைக்கல்லே முக்கியமானது, அந்த அஸ்திபாரத்தின் மூலைக்கல்லாக இயேசு கிறிஸ்து தாமே விளங்குகிறார். அஸ்திபாரம் இல்லாமல், பூமிக்குரிய அல்லது ஆவிக்குரிய எந்த வீடும் நிலைநிற்காது. மீண்டும் பவுல் சொல்கிறார், "தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது". (Iதீமோத் 3:15). கிறிஸ்து தாமே அஸ்திபாரமாக, மூலைக்கல்லாக இருந்து, அதில் தேவனுடைய வீடு, அல்லது சபை கட்டப்பட்டு வருமானால், அச்சபை சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாய் இருக்கிறது. அதாவது, அச்சபையானது திட அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டு வருவதால், அது சத்தியத்தை இழந்து போன இந்த உலகத்திற்க்கு அறிவிக்கும் நிலையில் இருக்கிறது.

பேதுரு அப்போஸ்தலன், தன் நாட்களில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதுகையில்", இப்படியிருக்க கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால், சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும்,

வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்க மில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள். மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள். அந்தபடியே இதோ! தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின் மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப் படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது; கீழ்ப்படியாமலிருக் கிறவர்களுக்கோ வீட்டைக் கட்டுகிறவர்களால் தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய அந்தக் கல் இடறுதற்கேதுவான கல்லும் விழுதற் கேதுவான கன்மலையுமாயிற்று. அவர்கள் திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர் களாயிருந்து இடறுகிறார்கள்; அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள். (பேதுரு 2:18)

மீண்டுமாக, இந்த எழுத்தாளனும், கிறிஸ்து, ஏசாயா 28:16-ல் சொல்லப்பட்ட தீர்க்க தரிசனத்தை எப்படி நிறைவேற்றும் மூலைக்கல்லாக இருக்கிறார் என்று எடுத்துச் சொல்லுகிறான். யூதர்கள் எந்த கல்லின் மேல் இடறினார்களோ அதுவோ அஸ்திபாரமாக மட்டுமில்லாமல், அஸ்திபாரத்தின் முக்கியமான மூலக்கல்லாக திகழ்கிறது. பேதுரு ஆசிரியர், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கிறார் என்றும், அவரை நிராகரிக்கிறவர்கள் இழந்துபோவார்கள் என்றும் நமக்கு காட்டுகிறார்.

மத். 16:13-19-ல் கிறிஸ்து அப்போஸ்தலர்களிடத்தில், உலகம் தன்னை பற்றி என்ன நினைக்கிறது என்று பேசிக்கொண்டிருந்தார். அப்போஸ்தலர்கள், சிலர் உண்மை இந்த தீர்க்கதரிசி என்றும் சிலர் அவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றனர். கிறிஸ்து, இந்த பதிலை அவர்களிடம் எதிர்நோக்கவில்லை. இப்படிப்பட்ட விசுவாசத்தின் மீது அவர் தமது சபையை கட்ட முடியாது. அதற்கு பிறகு தன் அப்போஸ்தலரிடம் திரும்பி நீங்கள் என்ன யார் என்று நினைக்கிறீர்கள் என்றார். அவர் "தேவனுடைய குமாரன்" என்று விசுவாசிப்பதாக அவர்கள் விளக்கினார்கள். அதன் விளைவாக, அந்த அறிக்கையின் மீது தான் தன் சபையைக் கட்டுவதாக வாக்குக்கொடுத்தார். அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் அப்போஸ்தலர்கள்

கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள், அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள், கர்த்தர் அவர்களை சபையிலே சேர்த்துக் கொண்டார். ஆனால், சபையை எதின் மீது கட்டினார். அவர் கிறிஸ்துவின் மீது, அதாவது அவர் தேவகுமாரன் என்ற உண்மையின் மீது கட்டினார். அது மாத்திரமல்ல, இன்றைக்கும் சபையானது அவ்வுண்மையைச் சார்ந்தே இருக்கிறது. கிறிஸ்துவே மூலைக்கல்லாக அச்சபையைத் தாங்குகிறார்.

ஏன் நண்பர்களே, நீங்கள் எதன் மீது கட்டுகிறீர்கள்? கிறிஸ்து சொல்வதை கேட்டு அதை செய்தால் அவர் மீது நீங்கள் கட்டுவீர்கள். நீங்கள் கேள்விப்பட்டு, கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்து, பாவத்திலிருந்து மனந்திரும்பி, அவர் தேவ குமாரன் என்று அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் எடுத்தால், அவர் உங்களைத் தமது சபையில் சேர்த்துக்கொள்வார், அந்தச் சபை கிறிஸ்துவின் மீது கட்டப்பட்டது (அப்-2). நீங்கள் ஞானவான்களாயிருந்தால் இதை செய்வீர்கள். நீங்கள் அப்படி செய்ய நாங்கள் ஜெபிக்கிறோம்.

**J.C. சோட்** **J.C. CHOATE**

## தேவனுக்கு பிரியமாய் ...

*புதிய ஏற்பாட்டு சபையில்லாத ஓர் ஊருக்கு ஒரு பிரசங்கியார் சென்றார். அவர் ஆராதனை நடக்குமிடத்தில் முதலில் பேசினார். பின்பு சந்தை வெளியில் பேசினார். அங்கே இருந்த மதத் தலைவர்கள் அதை கேள்விப்பட்டு, அவரை தங்களோடு பேசும்படி அழைத்தனர். அவர்கள், சரி இவன் பேசினது நமக்கு ஒத்துப்போனால், அவனோடு ஐக்கியம் வைத்துக்கொள்வோம் என எண்ணினார்கள். ஆனால், அவர்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக அவனோ உங்களை ஆராதனை தேவனுக்கு பிரியமாயிருக்காது என்று பிரசங்கித்தான்.*

*இப்படியும் ஒரு பிரசங்கியார்; இது மற்றவர்களின் மனதை காயப்படுத்தும் என தெரியாது போலும், எந்த பிரச்சனையும் ஏழாமல் ஒரு அருமை பிரசங்கம் செய்திருக்க நிச்சயமாக முடியும். இப்படிப்பட்டவர் நமக்கு வேண்டாமா? சரி யார் அந்த பிரசங்கியார்?*

*அவர் பெயர் பவுல், அவர் அத்தேனே பட்டணத்தில் இப்படிப் பிரசங்கித்தான். அது அங்கு கலகத்தை உண்டாக்கியது. அங்கே இருந்த மதத்தலைவர்களுக்கு அவன் பிரசங்கித்தது பிடிக்காமல், அவன் முடிக்கும் முன்னே எழுந்து சென்றார்கள். ஆனால் அது தேவனுக்கு பிரியமாயிருந்ததா? அப்போஸ்தலர் 17-ம் அதிகாரத்தை நீங்களே புரட்டி வாசியுங்கள்.*

பெண்கள் பகுதி

# இராஜாவுக்கான வெகுமதிகள்

"என்னால் உன்னோடு ஒத்துப்போக முடியாது" என்று கோபத்துடன் ரேச்சலை குற்றம் சாட்டும் விதமாக கூறுகிறாள் மேரி. நீயும், ஆண்ட்ரூவும் செய்வதுதான் சரி. மற்றவர்கள் செய்வதெல்லாம் தவறு என்று நீ எப்படி உறுதியாகக் கூறுகிறாய்? நீங்கள் ஆரம்பித்த இந்த சிறிய சபை அப்படியென்ன அதிவிசேஷம் கொண்டது? நூற்றுக்கணக்கான சபைகளில் இதுவும் ஒரு சபை. உன்னுடைய சபைதான் பெரியது என்று சொல்வதற்கு ஒன்றுமில்லை. உங்களுக்கு குறைந்த பட்சம் ஒரு பாஸ்டராவது அல்லது ஒரு சபைக் கட்டிடமாவதுமில்லை.

ரேச்சலின் கண்கள் கண்ணீரால் நிறைந்தன. மேரி, மேரி தயவு செய்து என்மீதும், ஆண்ட்ரூ மீதும் கோபப்படாதே என ரேச்சல் கெஞ்சுகிறாள். உன்னுடைய கோணத்திலிருந்து நீ நினைப்பது சரி என்று நான் உணர்கிறேன். ஆனால் நீ கேட்டவைகளையெல்லாம் மறந்துவிடுவதற்கு முயற்சி செய் அதாவது, "எல்லா சபையும் ஒன்று", "நல்ல சபை" அல்லது "நீ விரும்புகிற சபைக்குச் செல்லலாம்" அல்லது "கிறிஸ்துவை நீ உன் சொந்த இரட்சகராக உன் இருதயத்தில் ஏற்றுக் கொள்ளலாம்" அல்லது "இரட்சிப்புக்கு விசுவாசம் மட்டும் போதும்" என்பவைகளையெல்லாம் இதில் அடக்கம். ஆக, இப்படி நிறைய காரியங்களை, திரும்ப, திரும்ப, மேலும், மேலும் சொல்லிக்கொண்டே போகலாம் என்னவோ அவைகளெல்லாம் வேதாகமத்தில் இருப்பதுபோல. ஆனால் அவைகளெல்லாம் அதில் இல்லை! அவைகளையெல்லாம் நீங்கள் நீண்ட காலமாக கேட்டுக் கொண்டிருந்ததால் அவைகள் உண்மை என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்கள் நாங்கள் வேதாகமத்தில் உள்ள ஒரே சபையான ஆதிசபையை உங்களுக்கு அடையாளங்காட்டும் போது, நாங்கள் காட்டுகிற அந்த சபை பொய்யென்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஏனென்றால் இதற்கு முன்பு நீங்கள் இதைப் பற்றிக் கேள்விப்படவேயில்லை!

"நான் இதைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன்" மேரி சீக்கிரமாக பதில் சொல்கிறாள். எல்லா சபைகளிலுமுள்ள இரட்சிக்கப்பட்டவர்கள் எல்லாம் சேர்ந்து ஆவிக்குரிய கிறிஸ்துவின் சபையை உருவாக்குகிறார்கள் என்று எங்களுடைய பாஸ்டர் சொன்னதைக் கேட்டிருக்கிறேன். அவரும் ஒரே சபையைப் பற்றித்தான் கூறுகிறார். ஆனால், இது ஏதோ ஓரிடத்தில் கூடுகிற

ஒரு கூட்டத்தார் மட்டுமல்ல. இது எல்லா சபைகளிலுமுள்ள நல்லவர்கள் அடங்கிய ஒரு கூட்டம்.

"ஆனால் மேரி, சபையைப் பற்றி நீ வேதாகமத்தில் வாசிக்கும் பொழுது அவர்கள் ஏதோ கண்ணுக்குப் புலப்படாத வித்தியாசப்பட்ட நம்பிக்கைகளையும், ஆங்காங்கே வித்தியாசமான குழுக்களாகப் பிரிந்து செயல்படும் கூட்டமல்ல என்பது தெரியும். இது கிறிஸ்தவர்களனைவரும் ஒன்று சேர்ந்து சபையாக கூடி கொரிந்து பட்டணத்தில் ஆராதித்தார்கள் என்றும், அதே நம்பிக்கையோடே அதே விதமாக எருசலேமில் கூடினார்கள். என்றும், அவர்களைப் போலவே எபேசு பட்டணத்திலும் செய்தார்கள் மற்றும் உலகமுழுவதிலுமுள்ள வெவ்வேறு பட்டணங்களிலும் இதே விதமாக செய்து வந்தார்கள் என்றும் பார்க்கலாம் அவர்கள் வெவ்வேறு சபையைச் சேர்ந்தவர்கள் அல்ல. ஒரு கிறிஸ்தவன் ஒரு பட்டணத்திலிருந்து இன்னொரு பட்டணத்திற்குச் செல்லலாம். அவன் அங்கு சகோதரர்களைக் கண்டுபிடித்தால் அவர்களால் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளப்படுவான். ஏனென்றால் கிறிஸ்துவுக்குள் அவர்கள் அனைவரும் ஒன்றாயிருக் கிறார்கள்" என ரேச்சல் விவரித்தாள் "பார், இதோ ஒத்தவாக்கியப் புத்தகம் இருக்கிறது. வேதாகமத்தில் ஏதாவது பிரிவினைச் சபைகள் இருக்கிறதா என்று கண்டுபிடி! அவைகள் அங்கு இல்லை!

"அவைகளில் ஒன்று கூட இல்லையா?" என மேரி கேட்டாள். "இல்லை. எதுவுமே இல்லை. "நமக்கிருக்கும் இந்த அபாயகரமான சூழ்நிலை குறித்து நீ எண்ணிப்பார்க்கவில்லையா மேரி?" ரேச்சல் பரிந்துரைக்கும் கண்களோடு கேட்கிறாள். நாம் நமக்கு போதிக்கப்பட்ட எல்லா மார்க்க உண்மைகளையும் எல்லா மார்க்க காரியங்களையும் நம்முடைய மனதிலிருந்து எடுத்துப் போடும் பொழுதுதான், நாம் தேவனுடைய வார்த்தைகளை அப்படியே ஏற்றுக்கொண்டோம் என்று பொருள் உண்மையில் நாம் எதைச் செய்தோமோ அதை வசனங்களின்படி செய்ய வேண்டியவர் களாயிருந்தோம்.

ஆனால் நீ சொல்வது மற்ற எல்லோரையும் விட வித்தியாசமாக இருக்கிறது என்று மறுப்பு தெரிவித்தாள் மேரி. உன்னுடைய ஆராதனை கூட வித்தியாசமானதாகவே இருக்கிறது. பாட்டுபடுவதுகூட வேறுபட்டு, ஒரு பியானோவோ அல்லது எந்த ஒரு இசைக்கருவியும் இல்லாமல் இருக்கிறது. ஒருவேளை இனிமேல் இசைக்கருவி வாசிக்க ஒருவரை தேர்ந்தெடுப்பாயா?

அங்கேதான் நாம் கவனமாகயிருக்க வேண்டும். மேரி, ஆராதனை என்பது "நமக்காக" அல்ல. அல்லது வேறுபட்ட ஒரு சத்தத்திற்காக அல்ல. அல்லது நமக்கு நன்றாக இருக்கிறது என்பதற்காக அல்ல. உண்மையான ஆராதனை என்பது தேவனை மகிமைப்படுத்துவதற்காகத்தான். அவர் எதை

எதிர்பார்க்கிறாரோ அதை செய்வது தான். ஏனென்றால் அதன் மூலம் அவரை நாம் பிரியப்படுத்துகிறோம்.

"பழைய கால கதைகளிலே ராஜாக்கள் முழு அதிகாரமும் பெற்றிருந்த பொழுது என்ன பரிசுகளை அவருக்குக் கொண்டு வரவேண்டுமென்று அவருக்கு கீழ் இருந்தவர்களுக்கு கட்டளையிடப்படும். அவருக்கு முன்பாக வருகிறவர்கள் வணங்கிய தலைகளோடு பரிசுகளை வழங்கும் போது பயத்துடனும், தாழ்மையுடனும் வருவார்கள். ஒருவேளை அவரை பிரிப்படுத்தாமல் இருந்தால் தங்களை உயிரோடு வைப்பாரோ அல்லது சாகச் செய்து விடுவாரோ என்ற பயத்துடன் அவ்வாறு செய்வார்கள்.

தேவன் நம்முடைய ராஜாவாக இருக்கிறார். நம்மெல்லார்மேலும் முழு அதிகாரமும் அவருக்கு இருக்கிறது. இயேசு கிறிஸ்து நம்மை எச்சரித்திருக்கிறார். யாரெல்லாம் தேவனைத் தொழுதுகொள்ளுகிறார்களோ அவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும். (யோவா 4:24) மனிதனுடைய கோட்பாடுகளின் மூலம் அவரை ஆராதித்தால் அது வீணான ஆராதனையாகும். இங்கே மத் 15:9-ல் இயேசு கூறும் எச்சரிப்பைப்பார். "மனுஷருடைய கற்பனைகளை, உபதேசங்களாய் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்".

"பழைய கால இராஜாக்களைப் போலவே தேவனும் அவருடைய பிரசன்னத்திற்கு வரும்போது ஏதாவது ஒரு பரிசை அவருக்குக் கொண்டு வரவேண்டும் என்று கேட்கிறார். முதலாவதாக, அவருக்குப் பரிசாக நம்முடைய இருதயத்தைக் கேட்கிறார். வசனத்தைப் படிக்கும் போதே நம்முடைய இருதயத்தைத் திறந்து வசனத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர் நமக்கு செய்த எல்லா நன்மைகளுக்கும் நன்றி செலுத்தும் வண்ணமாக நம்முடைய ஜெபம் அமையவேண்டும் என எதிர்பார்க்கிறார். அத்தோடு நம்முடைய தேவைகளுக்காக அவரிடம் கேட்கவேண்டுமென்று விரும்புகிறார். இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு கற்றுக் கொடுத்த ஜெபத்தை மத். 6:9-13 வசனப்பகுதிகளில் காணலாம்.

தேவனை ஆராதிப்பதில் மற்றொரு முக்கியப் பங்கு அவருடைய குமாரனின் மரணத்தை நினைவு கூறும் பந்தி ஆகும். ஆதிக் கிறிஸ்தவர்களுக்கு இது முக்கியமான ஒன்றாக இருந்தது. ஒரு சமயம் (அப் 20:6-11) அப்போஸ்தலனாகிய பவுல் துரோவா பட்டணத்தில் திங்கள் கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை கிறிஸ்தவர்களோடு சேர்ந்து அப்பம் பிட்பதற்காக காத்திருந்தார். அந்தப் பந்தியை இயேசு தான் காட்டிக் கொடுக்கப்பட்ட இரவில் ஆரம்பித்தார். இந்த துரோவா பட்டணத்து சம்பவத்தில் ஆராதனை முடித்து அன்று இரவு முழுவதும் பிரசங்கித்து

பவுலும் அவனோடிருந்தவர்களும் அவசரமாக புறப்படவேண்டியிருந்தது. இந்த மாதிரி வசனப் பகுதிகளை கவனமாகப் படித்தால் இந்த பந்தியினுடைய முக்கியத்துவம் நமக்கு விளங்கும். இதுதான் ஆராதனையின் முக்கிய பகுதியாக ஒவ்வொரு ஞாயிறும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இன்று பெரும்பாலான மக்கள் செய்வது போல வருடத்திற்கு ஒருமுறையோ அல்லது இரண்டு முறையோ கடைபிடிக்கக்கூடாது.

தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் அடுத்த காரியம் நம்முடைய சம்பாத்தியத்திலிருந்து அவருக்குக் கொடுப்பது. இங்கே (1கொரி : 16:2) (2 கொரி 9) ஆகிய பகுதிகளில் உதாரத்துவமாகவும், உற்சாகமாகவும் தேவனுக்கு கொடுத்தார்கள் என்று பார்க்கிறோம்.

அவரை ஆராதிக்கும் போது அவருக்காக நாம் கொடுக்க வேண்டும் என அவர் எதிர்பார்க்கும் ஐந்தாவது ஈவு "உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலி" எபி 13:15 ஆதித் திருச்சபையிலே எந்த வகையான இசைமுறை கையாளப்பட்டது, என்று நானும் ஆண்ட்ரூவும் பாடல் பற்றி கூறும் எல்லா வசனப்பகுதிகளிலும் எடுத்துப் பார்த்தோம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பாடுங்கள் என்றுதான் உள்ளது. நம்முடைய ராஜாவாகிய அவர் ஒரே ஒரு வகையான இசையைக் கேட்கும்போது, அதாவது அவர் உண்டாக்கின கருவியிலிருந்து கேட்கும்போது அதற்குமாறாக ஒரு பியானோவையோ, ஆர்கனையோ அல்லது கித்தாரையோ அவர் முன் கொண்டு செல்ல முடியாது. நம்மால் முடியுமா, மேரி?" ரேச்சல் கேட்டாள். நாம் பிரியப்படுத்துவது தேவன் ஒருவரை மட்டுமே என்பதை நாம் எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். நம்மை நாமே பிரியப்படுத்திக் கொள்ளக்கூடாது. பல வருடக் கணக்காக புதிய, புதிய மனிதக் கோட்டுபாடுகளால் நிறைய மாற்றங்கள் உருவாக்கப்பட்டு விட்டன. ஆனால் இயேசு கிறிஸ்து எச்சரித்தது போல மனிதனுடைய உபதேசங்களின் படி தொழுதுகொள்வது இன்றும் வீணான ஒன்றுதான்".

ரேச்சல் தன்னுடைய விளக்கங்களை கொடுத்து முடித்த பின்பு மேரி அமைதியாக உட்கார்ந்து கொண்டாள். கடைசியாக அவள் ரேச்சலிடம் நீ கூறிய யாவும் சிந்திக்கத்தக்கதாக உள்ளது. ஒருவேளை அது வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் நான் இன்னும் நேரங்களை படிப்பதற்கு ஒதுக்க வேண்டும் என்றாள்.

**R.R. NAYAGAM** **B.B. CHOATE**

# பிரகாசமானவன்

தரணியில் தங்கள் பெயர் நினைக்கப்படவேண்டுமென்ற தணியாத தாகத்தால் தர்ம சாலைகளையும், மலரும் சிறுமொட்டும் பார்த்து தன் பெயரை அறிந்து கொள்ளும் வண்ணம் கல்வெட்டுகளையும், நடப்போர் கண்களில் பட வேண்டுமென்பதற்கு சாலையின் நடுவே பல சிலைகளையும் உருவாக்கி மகிழ்வோர் பலர் உண்டு. ஆனால், இவைகளில் தங்கள் நாட்டத்தைச் செலுத்தாமல், இறைப்பணியை, தேவ சித்தத்தை மாத்திரம் செய்து முடிப்பதில் தங்கள் கவனத்தை செலுத்தும் சிலரும் இவ்வுலகில் ஆங்காங்கே முளைக்கத்தான் செய்கிறார்கள். இப்படிப்பட்டவர்களை உலகம் மறக்காமல் நினைவில் வைத்திருப்பதை பார்க்கையில் சிந்தை மகிழ்கிறது, அது நம் மனதிற்கு விந்தையான ஒன்றாகவே திகழ்கிறது.

உலகம் தன் பெயரை நினைக்க வேண்டுமென்று எண்ணாத சிலருக்குள் வைத்தியனாகிய லூக்கா மிகச் சிறந்த உதாரணமாக மிளிருகிறார். வேதத்தில் ஈடு இணையில்லா சுவிசேஷ நூலையும், சபை சரித்திரத்தை தன் பக்கங்களில் ஏந்தி நிற்கும் அப்போஸ்தலர் நடபடிகளும் நம்மை சுவாசிக்கின்றன. ஜீவ புத்தகத்தில் தன் பெயர் இடம்பெற்றால் போதுமென நினைத்த இந்த உத்தமனாகிய லூக்காவைப் பற்றி அவர் செய்த தியாகம், அவனுக்கு இருந்த திறமை, அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையில் அவர் எப்படி கடைசி வரையும் உறுதுணையாக இருந்தார் என்பது பற்றியும் இம்மாதம் படிக்க முயற்சி செய்யப்போகிறோம்.

## லூக்காவின் தியாகம்

அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசே பட்டணத்திற்கு நூல் ஒன்று வடிக்கையில், “பிரியமான வைத்தியனாகிய லூக்கா .....” (கொலோ 4:14) என்று எழுதுவதை நாம் கவனிக்கிறோம். அப்படி எழுதியிருப்பதை நாம் படிக்கையில் லூக்கா ஒரு வைத்தியன் என்ற செய்தியை நாம் அறிந்து கொள்ளுகிறோம். இக்காலத்திலேயே வைத்தியர்களுக்கு, அதாவது டாக்டர்களுக்கு திரண்ட வருமானம் கிடைக்கிறது, அக்காலத்தில் இதைவிட அதிகமான வருமானத்தை இத்தொழில் ஈட்டியிருக்கும் என்பதில் சந்தேகம் எள்ளளவுமில்லை. ஆனால் நமது லூக்காவோ, திரண்ட வருமானமுள்ள உத்தியோகத்தை உதறித்தள்ளி சுவிசேஷ பணியை ஏற்றுக்கொண்டார்.

லூக்கா தன்னுடைய நூல்களை யாருக்கு எழுதினார் என்பதை நாம் கவனிக்கையில், “மகா கனம் பொருந்திய தெயோப்பிலுவே” என்று (லூக்கா 1:1) ஆரம்பிப்பதை கவனிக்கிறோம், இவர் ஒரு வைத்தியர் அதுவும் கனம்

பொருந்தியவருக்கு கடிதம் எழுதும் அளவுக்கு அவரை அறிந்த ஒரு வைத்தியர், இன்றைய காலத்தில் ஒரு மந்திரியை நன்றாக அறிந்த ஒரு வைத்தியர் எனச் சொல்லலாம். லூக்கா ஒரு வேளை அந்த கனம் பொருந்தியவரின் செல்வாக்கை பயன்படுத்த வேண்டுமென்று நினைத்திருந்தால் நிச்சயம் அதற்கு வாய்ப்பு இல்லாமலில்லை. ஆனால் லூக்காவோ சங்கீதக்காரனைப் போல, "திரளான செல்வத்தில் களிகூறுவது போல, நான் உமது சாட்சிகளின் வழியில் களி கூறுகிறேன்." (119:14) என்று அல்லவா நினைத்திருக்கிறார்.

லூக்கா நினைத்திருந்தால் திரளான வருமானம் தனக்கென்று புகழ், ஆடம்பரமான, சொகுசான வாழ்க்கை, ஜனங்களிடத்தில் நல்ல மரியாதை போன்ற இன்னும் பல காரியங்களை பெற்றிருக்கலாம், ஆனால் அவரோ "அநேகமாயிரம் பொன் வெள்ளியைப்பார்க்கிலும் நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்" (சங். 119:72) என்றார். **இந்த லூக்காவோ தான் எழுதின இரண்டு நூல்களிலும் தன் பெயரைக் கூடக் குறிப்பிடவில்லை என்பது நம்** நினைவிற்கே எவ்வளவு தூரமாயிருக்கிறதென்பதைப் பாருங்கள். யோவான் ஸ்நானகன் கூறினது போல இவன் சிறுகவும் தேவனுடைய நாமம் பெருகவும் செய்திருக்கிறான் (யோ. 3:30)

மேல்த்தட்டு மக்களிடத்தில் பழகுகிறதை விட கனமான ஊழியத்தை செய்கிற அப்போஸ்தலனாகிய பவுலுடன் இணைந்து இறைப்பணி செய்வதையே அதிகமாக நாடினான். சங்கீதக்காரன் சொல்வது போல், "உமக்கு பயந்து உமது கட்டளைகளைக் கைக்கொள்கிற அனைவருக்கும் நான் தோழன்" (சங். 119:63) என லூக்காவும் சொல்லுகிறான். எகிப்தின் சந்தோஷங்ளை வெறுத்த மோசேயைப் போல இவனும் இவ்வுலகத்து சிநேகங்களை வெறுத்து கிறிஸ்துவுக்காக பவுலுடன் பாடுபடுவதை தெரிந்து கொண்டான்.

## லூக்காவின் திறமை

நம்மை வனைந்தெடுத்த தேவனுக்கு இவ்வுலகில் நாமிருக்கும் வரை நன்றியாய்ப் பல காரியங்கள் ஆற்றுவது மனிதனின் மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. இதை உள்ளத்தில் உணர்ந்த லூக்கா, தனது தாலந்துகளை இறைவனுக்காகப் பயன்படுத்த முன்வந்தார். அவர் சொல்வதைக் கவனியுங்கள், "ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் ....." என்கிறார். லூக்கா ஒரு வைத்தியன், எந்த ஒரு காரியத்தையும் அடிவேர் வரை சென்று கண்டறிவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். அதை அப்படியே இங்கும் பயன்படுத்துகிறார். விசேஷத்தை "ஆதி முதல்", அதுவும் "எல்லாவற்றையும் திட்டமாய்"

விசாரிக்கிறார். லூக்கா தன் தாலந்தை எவ்வளவாக தேவனுக்காகப் பயன்படுத்தினார் என்று சிந்தியுங்கள்.

வாலிபர்களாகிய நாம், நம்முடைய திறமைகளை, தாலந்துகளை, நம்மிடத்தில் உள்ளவைகளை, தேவனுக்கென்று கொடுக்க வேண்டும். மோசே தன்னிடத்தில் இருந்த கோலையும், நியாயாதிபதியாகிய சம்கார் தாற்றுகோலையும், இஸ்ரவேலின் இரண்டாம் அரசனாகிய தாவீது, இடையனாக இருந்த போது தன் கவனையும், தொற்காள் தன் கரத்திலிருந்த ஊசியையும், தேவனுக்காக கொடுத்தார்கள். 5 அப்பம், 2 மீன்களை கொண்ட சிறுபையன், இயேசுவினிடத்தில் அதை கொடுத்ததையும் நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். அவைகளை தேவன் தன்னுடைய வேலைக்கென்று எப்படி பயன்படுத்தினார் என்பதையும் அறிவோம். **அதுபோலவே லூக்காவும் தனக்குண்டான திறைமையை ஏதோ மருத்துவ நூல் எழுத பயன்படுத்தாமல் மகத்துவமான இரண்டு நூல்களை எழுத ஒப்புக்கொடுத்தார்.**

லூக்காவின் சுவிசேஷ நூலை நாம் கவனிக்கையில், அதில் இயேசுவின் அற்புதப் பிறப்பை, சகரியா எலிசபெத் ஆகியோரின் வாழ்க்கையில் இருந்தே தொடங்குவார், கிறிஸ்து புறஜாதிகளை நேசித்தார் என்பதை விளக்க எலியாவின் நாட்களிலே வந்த பஞ்சத்தைச் சொல்லி, அதில் புறஜாதி ஊராகிய சரெப்தாவுக்கு எலியா அனுப்பப்பட்டதையும், எலிசா காலத்தை சுட்டிக்காட்டி அதில் சீரிய தேசத்தானாகிய நாகமான் சுத்தமாக்கப்பட்டான் என்றும் கூறுகிறார். (லூக்கா 4:24-27) பெண்கள் கிறிஸ்துவின் காலத்தில் ஒரு பொருட்டாக எண்ணப்படவில்லை என்றாலும், அவர்களும் கிறிஸ்துவுக்கு தங்கள் ஆஸ்திகளால் ஊழியம் செய்தார்கள் என்பதையும் கூறுகிறார். (லூக்கா 8:1-4).

அப்போஸ்தலர் நடபடிகள் நூலை நாம் நோக்கினால், அது நமக்கு சபை சரித்திரம் முழுவதையும் காட்டும், இயேசு பரமேறிச் சென்றபின் நடந்தவைகளை நமக்கு கூறும். அது ஒரு ஆரம்பங்களின் புத்தகமென்றே அழைக்கப்படும். சபை, பரிசுத்த ஆவி பொழியப்பட்டது, கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம், இன்னும் பல காரியங்கள் இதிலே உள்ளடக்கம். லூக்கா இந்நூலை ஆவியானவரின் துணை கொண்டு எழுதவில்லை என்றால் அப்போஸ்தலர் பவுலின் மனமாற்றம், அவர் செய்த மூன்று சுவிசேஷப் பிரயாணம் ஆகியவைகள் நமக்கு தெரியாமலே போயிருக்கும். ஆகவே லூக்கா தன் திறமையை தேவனுக்கென்று கொடுத்ததின் பலனாகத் தான் இவைகள் நமக்கு கிடைத்தன என்பதை நாம் மனதில் வைத்துக் கொண்டு நம்மிடத்தில் உள்ளதை நம்மை உண்டாக்கினவருக்கு கொடுப்போம்.

## லூக்கா மாத்திரம் என்னோடு இருக்கிறான்

சிலர் நாம் நன்றாக வாழும் காலங்களில் நம்மோடு அதிக அன்பு காட்டி பழகுவார்கள். நாம் இடுக்கண்களில் அகப்படும் போது நம்மை விட்டு வெகு தூரம் ஓடிப்போவார்கள். ஆனால் இந்த லூக்காவோ பவுலின் ஒப்பற்ற நண்பனாகக் கடைசி வரை இருந்தார். பவுல் அப்போஸ்தலன் கைது செய்யப்பட்டு ரோமாபுரிக்குக் கொண்டு போகப்பட்டார். நாமாக இருந்தால் நைசாக நழுவி இருப்போம் அல்லது கப்பல் வரைக்கும் சென்று தலையை காண்பித்து வந்திருப்போம், ஆனால் லூக்காவோ பவுலோடு சென்றார்.

பவுல், முதல் விசை உத்திரவு சொல்ல நிற்கையில், ஒருவனும் அவருடனே இல்லை, காத்தர் அவரை எல்லா தீங்குக்கும் நீங்கலாக்கி மீட்டார், அப்படி அவர் பாடுகள் பட்டபோது, அவர் சொல்லுகிறார் இப்பொழுது "லூக்கா மாத்திரம் என்னோடே இருக்கிறான்."(IIதீமோ 4:11) என்று, அதற்கு முன் வசனத்தில் தான் தேமா இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்துப் போய்விட்டான் என்கிறார். சூழ்நிலை இப்படி இருந்த போதிலும் பவுலை விட்டு லூக்கா பிரியவில்லை எனக்கன்பானவர்களே ! நாமும் கூட ஊழியர்களோடு இப்படி இணைந்து கடைசி வரை பணியாற்றுவோம். லூக்காவைப் போல தேவனுடைய மகிமைக்காய் பல காரியங்களைச் செய்வோம் ! **ஆமென் !!**

***ஜே. பிக்கின்ஸ்***

### இயேசுவின் போதனை ஏன் பலனுள்ளதாயிருக்கிறது

1. அவர் ஜனங்களை மரியாதையுடன் நடத்தினார் [மாற்கு 10:46-25]
2. அவர் தெளிவாகப் பேசினார் [யோவான் 3:1-3, 4:1-4]
3. அவர் இரக்கத்தோடு பேசினார் [மாற்கு 8:2; லூக். 13:34]
4. அவர் பாரபட்சம் காட்டவில்லை [மத். 8:2,3; மற் 10:21]
5. அவர் அதிகாரமுடையவராகப் பேசினார் [மத் 7:28, 290; 4:4-10]
6. அவர் போதித்தது போலவே வாழ்ந்தும் காட்டினார். [எபி 4:15; 7:26; யோவா 8:29, 46 1பேதுரு 1:19]

சிறுவர் பகுதி

# ஆமோஸ் தீர்க்கன்

எனக்கன்பான சிறுதம்பிகளே! தங்கைகளே இறைமகன் இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையில்லாத நாமத்தினால் உங்களை வாழ்த்துவதில் எல்லையில்லா மகிழ்ச்சி அடைகிறேன். இம்மாதமும் உங்களுடன் ஒரு தீர்க்கனைப் பற்றியே பகிர்ந்து கொள்ளப்போகிறேன். சென்ற மாதங்களைப் போலவே இது உங்களுக்கு பயன் கொடுக்கக்கூடியதாக இருக்கும் என திடமாக எண்ணுகிறேன். இம்மாதம் நாம் சந்திக்க இருக்கும் தீர்க்கன், இஸ்ரவேலை தேவனிடத்தில் திருப்ப முயன்ற ஒரு மேய்ப்பன், அவனைப் பற்றி அறிந்து கொள்ள தொடர்ந்து படியுங்கள்.

வேதாகமத்தில் மேய்ப்பர்களைப் பற்றி பலமுறை சொல்லப் பட்டிருக்கிறது, ஆனால் முக்கியமான ஒரு மேய்ப்பனைப் பற்றியோ அவ்வளவாக நாம் அறியவில்லை. அவன் பெயர் ஆமோஸ், பழைய ஏற்பாட்டிலே இவன் பெயர் தாங்கிய ஆமோஸ் என்கிற நூலிருந்து இவனைப்பற்றி அறிகிறோம். இஸ்ரவேல் நாட்டின் தெற்குப் பகுதியாக இருந்த யூதேயாவிலே தெக்கோவா என்னும் கிராமத்திலிருந்து இவன் வந்தான். இவன் தாழ்மையுள்ளவன், ஆடுகளை மாத்திரம் மேய்க்காமல் காட்டத்தி மரங்களைக் கவனித்துக் கொண்ட கடின உழைப்பாளி. ஆமோஸ் ஒரு சாதாரண கிராமத்திலே ஒரு சாதாரண வேலை செய்து கொண்டு வந்தான். அவன் பிரபலமானவனோ அல்லது பணக்காரனோ அல்லது பலம் மிகுந்தவனோ அல்ல. ஆனால் தேவன் அவனை மகத்தான ஒரு வேலைக் காகத் தெரிந்துக் கொண்டார்; அவன் வீட்டை விட்டு வெகு தூரம், அதாவது இஸ்ரவேலின் வடக்குப் பகுதிக்குப் போய், இஸ்ரவேலர்களை அவர்கள் வழிகளிலிருந்து திரும்பும்படி சொல்வதே அந்த மகத்தான வேலையாகும். ஒரு பிரசங்கி யானவனாக இருக்கும் படியாகவோ ஒரு தீர்க்கதரிசியாக இருக்கும் படியாகவோ ஆமோஸ் பயிற்று விக்கப்படவில்லை. ஆனால் தேவன் அந்த வேலையை அவனிடத்தில் கொடுத்தபொழுது அவன் அதைச் செய்தான்.

யெரோபெயாம் ராஜா விக்கிரத்தை நாட்டியிருந்த பல ஊர்களில் ஒன்றான பெத்தேலுக்கு தேவன் அவனைப் போகச் சொன்னார். யெரோபெயாமும் மற்ற அரசர்களும் மனிதனால் உண்டாக்கப்பட்ட தெய்வங்களைப் பின்பற்றி, அந்த விக்கிரகங்களின் பெயரில் மிகவும் மோசமான காரியங்களைச் செய்யும்படி இஸ்ரவேலர்களை ஊக்கப்படுத்தி, தேவனிடத்திலிருந்து தங்கள் தெய்வங்களுக்கு பலியிடுவதும் அதன்



பெயரிலேயே பெரிய விருந்துகளை படைப்பது மாயிருந்தார்கள். தேவனுடைய பார்வையிலே சரியானதைச் செய் வதற்குப் பதிலாக தாங்கள் நல்ல தென்று கண்டதை செய்தார்கள். சொகுசான வாழ்க்கையிலும், செல்வங்களை சேர்த்துக் கொள்வதிலும் இஸ்ரவேலர்கள் அதிகமாய் ஈடுபாடு காட்டினார்கள். அவர்கள் சுயநலம் உடையவர் களாகவும், பேராசை உடையவர்களாகவும் இருந்ததினால் ஏழைகளை ஒடுக்கவும், நிராகரிக்கவும் செய்தார்கள். கொஞ்சம் நிலம் உடையவர்கள் அதிகம் விரும்பி ஏழைகளிடமிருந்து பரித்துக் கொண்டார்கள். நல்ல வீடு உடையவர்கள் பெரிய வீடு வேண்டு மென்று விரும்பி தங்களுக்காக "தந்தங்களினால் வீடுகளை" (3:15) கட்டிக் கொண்டார்கள். ஏழைகளுக்கு இருந்ததோ கொஞ்சம் அல்லது ஒன்றுமில்லாமை. பணம் இருந்த வர்கள் தங்கள் தேவைக்கு அதிகமாக வாங்கி புசிக்க ஆரம்பித்தார்கள். ஏழைகளோ பட்டினியாய் கிடந்தார்கள். இப்படி வாழும் படியாக இஸ்ரவேலர் களை தேவன் கட்டளை யிடவில்லை.

இஸ்ரவேலர்களிடம் ஆமோஸ் நீங்கள் நியாயமாய் நடந்து கொள்ள வில்லை என்று கூறினான். ஏனெனில் விக்கிரகங்கள் மனிதனால் உண்டான வைகள். மனிதனோ! சரியானது தவறானது என்பவைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றவன். மனிதன் ஒருவனுக் கொருவன் தவறு செய்தால் விக்கிரகம் அதைப் பற்றி கவலை கொள்ளது. ஆனால் தேவன் கவலை கொள்வார். ஏனெனில் அவர் நியாயம் உள்ளவர். தம்முடைய ஜனங்களும் நியாயமுள்ளவர்களாய் மற்றவர்களை நடத்தும்படி எதிர் பார்த்தார். இஸ்ரவேலர்கள் தங்களை பிறர் எப்படி நடந்த வேண்டும் என்று எதிர்பார்த்தார்களோ அப்படியே தாங்களும் மற்றவர்களை நடத்த வேண்டுமென்று தேவன் எதிர்பார்த்தார்.

ஆமோஸ் ஜனங்களிடம் "நீங்கள் பிழைக்கும்படி தீமையை அல்ல நன்மையைத்தேடுங்கள் அப்பொழுது நீங்கள் சொல்லு கிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருப்பார். நீங்கள்

தீமையை வெறுத்து, நன்மையை விரும்பி, ஒலிமுக வாசலில் நியாயத்தை நிலைப் படுத்துங்கள். ஒருவேளை சேனை களின் தேவனாகிய கர்த்தர் யோசேப்பிலே மீதியானவர்களுக்கு இரங்குவார். நியாயம் தண்ணீரைப் போலவும், நீதி வற்றாத நதியைப் போலவும் புரண்டு வரக்கடவது" (5:14-15, 24) 2700 என்றார். ஆண்டுகளுக்கு முன்பாக ஆமோஸ் இஸ்ரவேலருக்கு பிரசங்கித்திருந் தாலும், இன்றைக்கும் தேவனுடைய வார்த்தைகளை நாம் கேட்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க் கிறார். நாம் எப்படி மற்றவர்களால் நடத்தப்படவேண்டும் என்று எதிர்பார்க்கிறோமோ, அப்படியே நாம் மற்றவர்களை (மத் 7:12) நியாயமாகவும், தயவாகவும், சுயநலமற்றவர்களாகவும் நடந்தும்படி விரும்புகிறார் (யாக் 2:1-9, எபே. 4:32) தேவன் இஸ்ரவேலர் களின் வழியை மாற்றும்படி சொன்னார். நாம் அவருடைய வார்த்தையின்படி நடக்கவில்லையென்று சொன்னால் நம்மிடத்திலும் அதையே எதிர்பார்க்கிறார்.

**R. Abel Rodger Nayagam**

## ஆவிக்குரிய கேள்விகள்

- மார்க்க ரீதியாக நான் செய்யும் காரியங்களுக்கு வேதாகமத்திலிருந்து காரணங்கள் தரமுடியுமா? (Iபேதுரு 3:15;4:11)
- நான் ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கிறேனா? (யோவா 4:24)
- நான் அணிந்திருக்கும் மார்க்க பெயர்கள் வேதாகமத்தில் இருக்கிறதா? (அப் 11:26; மத் 4:16)
- நான் அங்கமாக இருக்கும் சபை வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதா? ரோமர் 16:16 மத் 16:18)
- கிறிஸ்துவின் எளிதான கட்டளையை ஏற்க மறுத்திருக்கிறேனா? (லூக். 6:46; அப் 2:38)
- நான் கிறிஸ்துவனாக இருக்கும்; உலக வழக்கத்தின் ஈடுபடுகிறேனா? (2 கொரி 6:17)
- நான் ஆராதனைக்கு போகாமலிக்கிறேனா? (அப் 20:7; எபி 10:25)

# I பேதுரு ஒரு கண்ணோட்டம்

**ஆசிரியர் : சீமோன் பேதுரு**
**காலம் : சுமார் கி.பி. 65**

## இந்நூல் பற்றி

1. பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தினியா தேசங்களிலே சிதறியிருக்கிறவர்களுக்கு இந்நூல் எழுதப்பட்டது.
2. இந்நூல் பாபிலோனிலிருந்து எழுதப்பட்டது என்று கருதப்படுகிறது. (Iபேதுரு 5:13)
3. தங்கள் விசுவாசத்தினிமித்தம் துன்பப்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு ஆறுதல் அளிப்பதற்காக இந்நூல் எழுதப்பட்டது.
4. இந்நூலில் துன்பப்படுதல், துன்பம் என்ற வார்த்தைகள் 15 முறையும், நம்பிக்கை குறைந்தது 4 முறையும் இடம் பெற்றிருகிறது.
5. கிறிஸ்தவர்களுக்கு பரலோகத்தில் நம்பிக்கையிருப்பதாகவும், அருமையான மற்றும் மேன்மையான வாக்குத்தத்தம் கொடுக்கப் பட்டதாகவும் கூறுகிறார்(1:3-5)
6. நம்முடைய மிகப்பெரிய எதிரி பிசாசைப் பற்றி இந்நூலில் சொல்லப்பட்டிருக்கிறது. (Iபேதுரு 5:6-9)

## *இந்நூலின் செய்தி*

1. தேவனுடைய பிள்ளைகள் தேவனைப் போலவே பரிசுத்தமாக இருக்கவேண்டும். (1:14-16)
2. கிறிஸ்தவர்கள் தேவனால் தனக்கென்று பிரித்தெடுக்கப்பட்ட விசேஷமான ஜனங்கள் (2:4-10)
3. நாம், நம்மை ஆளுகை செய்கிறவர்களுக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். நம்முடைய நாட்டு சட்டத்தை மதித்து நடக்க வேண்டும் (2:13-17)
4. ஒரு கிறிஸ்தவப் பெண் கிறிஸ்தவனாக இல்லாத தன் கணவரை தன்னுடைய நம்பிக்கையினாலே ஆதாயப்படுத்தலாம். (3:1-6)
5. மூப்பர்கள் சர்வாதிகாரிகள் அல்ல, அவர்கள் மேய்ப்பர்கள் (5:1-4)

# விசுவாசத்தின் அடிப்படைகள்

வேதாகமத்தின் அதிகாரம் மற்றும் ஏவுதல் பற்றியதான காரியங்களை நாம் விவாதித்துக் கொண்டு வருகிறோம். கீழ்க்கண்ட கேள்விகளை நாம் இதுவரைக்கும் அலசியிருக்கிறோம். 1. ஆவிக்குரிய நிலையில் நம்முடைய அதிகாரத்தின் அளவுகோல் எது? 2. வேதாகமம் தேவனுடைய ஏவுதலின்படியான வார்த்தை என்று சொல்லும் போது, அதன் பொருள் என்ன? 3. வேதாகமம் தேவனுடைய வார்த்தையென்று நம்புவதற்கு, வேதாகம சாட்சியங்கள் தவிர, வேறு காரணங்கள் இருக்கிறதா?

ஆவிக்குரிய நிலையில், தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமம் அதிகாரத்தின் அளவுகோலாயிருக்கிறதென்று ஏற்றுக்கொள்வதற்கு மாற்று என்ன இருக்கிறது? என்ற இந்தக் கேள்வியை, இம்மாதம் நீங்கள் கவனிக்கும்படியாகக் கேட்கிறேன்.

ஒரு மாற்று, மனிதர்களுடைய பாரம்பரியமும், செயல்களும் இன்றைக்கு மத உலகில் நாம் காண்பவைகளை எண்ணிப்பாருங்கள். வேதாகமத்தினிமித்தம் இயேசுவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லுகிற அநேகரிடத்தில், நீங்கள், அவர்களுடைய பாரம்பரியம், மற்றும் பழக்க வழக்கங்களுக்கான காரணத்தைக் கேட்டால், அவர்களால் ஒன்றுக்குங்கூட பதில் கொடுக்க முடியாது. அவர்கள் செய்கின்ற எதற்குமே வேதாகம அதிகாரம் முழுமையாக இல்லாதபடியால், என்னுடைய இக்கருத்தை தாழ்மையோடும், அதே சமயம் துக்கத்தோடும் சொல்லுகிறேன்.

உதாரணமாக, குழந்தைகளை ஞானஸ்நானப்படுத்துவதற்கும், வாரத்தின் முதல்நாள்தோறும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதற்குப் பதிலாக, மாதத்திற்கு ஒரு முறையோ, மூன்று மாதத்திற்கு ஒரு முறையோ பங்கு பெறுவதற்கும், தேவனைத் துதிப்பதற்கான ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துவற்கும், இப்படிப் பட்ட இன்னும் பல பழக்கங்களுக்கும், இயேசுவினிடமிருந்து எந்த அதிகாரமுமில்லை.

இவைகளை, நாம் முதல் நூற்றாண்டு சபையோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அப் 17:11-ல், பெரேயா பட்டணத்து சபையை தேவன் புகழ்ந்திருக்கிறார். தேவன் ஏன் இப்படிச் செய்தார் என்பதற்கான காரணத்தைத் தெரிந்து கொள்ள உங்கள் புதிய ஏற்பாட்டைத் திறந்து வாசித்துப் பாருங்கள்.

**முதலாவது**, அவர்கள், மனோவாஞ்சையாய்த் தேவ வசனத்தை ஏற்றுக்கொண்டார்கள். இதையே வேறு விதமாகச் சொல்வதானால், அவருடைய வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவ சித்தத்தை கற்றுக் கொள்ள ஆர்வமுடையவர்களாயிருந்துள்ளனர். **இரண்டாவது** "அவர்கள்; காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று வேதவாக்கியங்களை தினந்தோறும் ஆராய்ந்து பார்த்தார்கள்". பரலோகத்தின் தேவனால், நானும், நீங்களும் பாராட்டப்பட வேண்டுமானால், இதே விதமான மானோபாவம் உடையவர்களாயிருந்து, அவர்களைப் போலவே செயல்பட வேண்டும்.

மனிதர்களுடைய பழக்க வழக்கங்கள், பாரம்பரியங்கள் பற்றி இயேசு எப்படிப்பட்ட மனோபாவம் கொண்டவராயிருந்தார் என்று தெரிந்து கொள்வது நாம் என்ன செய்ய வேண்டுமென்று தீர்மானிப்பதற்கு உதவியாயிருக்கும். தயவுசெய்து மத் 7:7-9-ஐப் பாருங்கள். முதல் நூற்றாண்டில், "மனிதனுடைய பாரம்பரியத்தைக் கைக்கொள்ளும்படி, ...... "தேவகட்டளைகளைத் தள்ளிவிட்டதை தேவன் கடிந்து கொண்டார்.

நம்முடைய அன்பான இரட்சகர், மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, அவர்களுடைய பாரம்பரியத்தினாலே, **தேவனுடைய கட்டளையைத் தள்ளி விட்டார்கள்** என்று சொன்னார்.

அதை அவர்கள் செய்த போது அப்பொழுது என்ன நடந்தது அல்லது நானும், நீங்களும் இப்பொழுது செய்தால் என்ன நடக்கும்? அது நம்முடைய ஆராதனையை, வீணான ஒன்றாக மாற்றும் என்று இயேசு சொன்னார்; நாம், வீணான ஆராதனையை ஏறெடுப்போமானால், நாம் பரலோகம் போவோம் என்று கண்டிப்பாக எதிர்பார்க்க முடியாது.

மனிதர்களுடைய பாரம்பரியம் மற்றும் பழக்கவழக்கங்கள் பற்றி பவுலுடைய எண்ணம் எப்படி? கொலோ 2:8-ல், அவர் என்ன சொல்லுகிறார் என்று கவனியுங்கள். மனிதர்களுடைய பாரம்பரியங்களை நாம் ஏற்றுக் கொண்டு விட்டால், அது நம்மை ஆவிக்குரிய ரீதியில் அழித்துப்போடும்.

Iபேது 1:18-ல், மனிதர்களுடைய பாரம்பரியம் மற்றும் பழக்கவழக்கங்கள் பற்றி, பேதுரு அப்போஸ்தலனுடைய எண்ணம் எப்படியென்று பார்க்கிறோம். கிறிஸ்துவின் உபதேசமாக இல்லாமல் நம்முடைய முன்னோர்களைப் போல மனிதர்களுடைய பாரம்பரியங்களின்படி வாழ நானும், நீங்களும் தெரிந்து கொள்வோமானால், அது நம்முடைய வாழ்க்கையையே வீணாக்கி விடும்!.

தேவனுடைய இந்த வசனங்களிலிருந்தும், வேறு வசனங்களிலிருந்தும், நாம் என்ன முடிவுக்கு வரமுடியும்? தன்னுடைய வேதாகமத்தின் வசனங்களின்படியான அளவுகோலை மீறுகிற, மனிதனுடைய பாரம்பரியம், பழக்க வழக்கங்களாகிய அளவுகோலை தேவன் ஏற்றுக் கொள்வதில்லை.

வேதாகமம் நம்முடைய அதிகாரத்தின் அளவுகோல் என்று ஏற்றுக்கொள்வதற்கான மற்றொரு மாற்று, மனிதனுடைய பொது அறிவு அல்லது தர்க்கிக்கும் திராணி. இப்பொழுது, நாம் யோசிக்கும்படியும், சரியாகப் பகுத்தறியும் படியுமான திராணியை நமக்குத் தந்திருக்கிறார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இருப்பினும், கீழ்க்காணும் வசனங்களில், தேவன் கொடுத்திருக்கும் எச்சரிப்பைக் கவனமாக எண்ணிப்பாருங்கள். முதலாவது, ஏரோ 10:23-ல், தன் நடைகளை நடத்துவது, நடக்கிறவனாலே ஆகிறதல்ல வென்று தேவன் தெளிவுபடுத்துகிறார். அதாவது நமக்கு தேவனிடத்திலிருந்து வழிநடத்துதல் தேவை.

இரண்டாவது, நீதி 3:5,6-ல், நம்முடைய சுயபுத்தியின்மேல் சாய வேண்டாம் என்று தேவன் அறிவுறுத்துகிறார். அதாவது, நம்முடைய ஞானத்தின் மீதோ அல்லது எந்தவொரு மனிதனுடைய ஞானத்தின் மீதோ நாம் சாயக்கூடாது. மாறாக, தேவன் நம்முடைய முழு இருதயத்தோடும் அவர்மீது நம்பிக்கை வைக்க வேண்டுமென்றே சொல்லுகிறார். நம்முடைய **வழிகளிளெல்லாம்** நாம் அவரை நினைக்க வேண்டுமென விரும்புகிறார். இதன் பொருள், நாம் ஒவ்வொரு நாளிலும், நம்முடைய சித்தத்திற்கு மேலாக, அவர் சித்தம் செய்ய முயற்சிக்க வேண்டும்.

தேவன், ஏன் இப்படிப்பட்ட எச்சரிப்பைக் கொடுக்கிறார்? இதற்கான ஒரு சிறந்த பதிலை தேவன் ஏசா 55:8,9 வசனங்களில் கொடுத்திருக்கிறார் என நான் நம்புகிறேன். அநேக சமயங்களில், நம்முடைய வழிகளும், யோசனைகளும், தேவனுடைய வழிகளாகவும், யோசனைகளாகவும் இருப்பதில்லை. உண்மையில், பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே நம்முடைய வழிகளையும், நினைவுகளையும் பார்க்கிலும் தேவனுடைய வழிகளும், நினைவுகளும் உயர்ந்திருக்கிறது.

இந்த வசனங்களில், தேவன் நமக்கு என்ன சொல்லியிருக்கிறார் என்பதை அடிப்படையாக வைத்து, ஒரு முடிவுக்கு வருவோம். நம்முடைய பொது அறிவின் மீதும், தர்க்கிக்கும், திராணியின் மீதும் நாம் **முழுமையாக**

சார்ந்திருக்க முடியாது. மாறாக, நம்முடைய நினைவுகளையும், வழிகளையும், தேவனுடைய நினைவுகளுக்கும், வழிகளுக்கும் உகந்ததாக மாற்றவேண்டும். அதை நாம், தேவனுடைய வார்த்தைகளைத் தொடர்ந்து தியானித்து, நம்முடைய அன்றாட வாழ்க்கையில் செயல்படுத்துவதன் மூலமே செய்ய முடியும்.

இங்கே, வேதாகமம் நம்முடைய அதிகாரத்தின் அளவுகோல் என்று ஏற்றுக்கொள்வதற்கான, **மூன்றாவது** மாற்று என்ன என்று பார்ப்போம். இது, முடிவெடுப்பதற்கு, மனித உணர்வுகளைப் பயன்படுத்துவது. இவ்வழக்கம், மத உலகில் இன்று பரவலாகக் காணப்படுகிறது. ஒரு காரியத்தைக் குறித்து தாங்கள் எப்படி உணருகிறோம் என்று பார்த்து, அந்த உணர்ச்சிகளின் அடிப்படையில் அநேகர் தீர்மானம் எடுக்கின்றனர்.

உணர்ச்சிகளே தவறு என்று நான் சொல்லவில்லையென்பதை தயவு செய்து கவனியுங்கள். இயேசு கண்ணீர் விட்டார் (யோவா 11:35) அவருக்கு கோபமும் ஏற்பட்டது (மாற்3:5). ஒருவர் பேரிலொருவர் மன உருக்கமுள்ளவர்களாயிருங்கள் என்று நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார். (Iபேது 3:8) .

கீழ்க்கண்ட வாக்கியத்தின்படி, அநேகர் மனோபாவம் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. "என் இருதயத்தில் ஓர் உணர்வு இருக்கிறது." அதாவது, இந்த மனிதன், தேவன் தம்முடைய வசனத்தில் என்ன சொல்லியிருக்கிறார் என்பதினடிப்படையில் முடிவு எடுக்காமல், அவனோ அல்லது அவளோ என்ன **உணர்கிறார்களோ** அதனடிப்படையில் முடிவு எடுப்பது.

இப்படிப்பட்ட மனோபாவத்தை, பல வேத வசனங்களோடு ஒப்பிட்டுப் பாருங்கள். முதலாவது, நீதி 4:12-ல் தேவன் சொல்லுவதைக் கவனியுங்கள். "மனிதனுக்குச் செம்மையாகத் தோன்றுகிற வழி உண்டு....." அதாவது, இந்த மனிதன், அவன் நடக்கிற வழி நல்லவழி என்று **உணருகிறான்.**

இருப்பினும், தேவன் அடுத்ததாக என்ன சொல்லியுள்ளார்? "அதன் முடிவோ மரண வழி" என்று எனக்கோ, உங்களுக்கோ, ஏதே ஒன்று நல்லதாகத் தோன்றுகிறதாகவும், நன்றாக உணருகிறதாகவும் கண்டிப்பாக இருக்க முடியும். ஆனால், அது தேவனுடைய வார்த்தைகளில் காணப்படாததாக இருந்தால், அதன் முடிவு மரணமாக இருக்கும். அதாவது தேவனிடத்திலிருந்து நித்திய காலமாக பிரிக்கக் கூடியதாக இருக்கும்?

இன்னும், மத் 7:21-23-ல் இயேசு என்ன சொல்லியிருக்கிறார் என்பதைக் கூர்ந்து கவனியுங்கள், அங்கே, நம்முடைய இரட்சகர்,

அவரிடத்தில் "கர்த்தாவே, கர்த்தாவே" என்று சொல்லக் கூடிய சிலரைக் குறித்து விவரித்திருக்கிறார். இவர்களைப் பார்த்தால், பக்தியுள்ளவர் களாகவே இருக்கிறார்கள்.

அவர்கள் தீர்க்கதரிசனம் உரைத்தோம் என்றும், பிசாசுகளைத் துரத்தினோம் என்றும், இயேசுவின் நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் என்றும் சொல்லுவார்கள் உண்மையில், இவர்கள், கர்த்தரோடு சரியான உறவில் தான் தாங்கள் இருக்கிறோம் என்று **உணருகிறவர்கள்** அவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட்டவர்கள் அவர்களுக்குத் தெரிந்தது.

அப்படிப்பட்டவர்களில், அநேகருக்கு என்ன நடக்கும் என்று இயேசு சொன்னார்? நம்முடைய இரட்சகர் அவர்களைப் பார்த்து, "நான் ஒருக்காலும் உங்களை அறியேன்; என்னை விட்டு அகன்று போங்கள் ....." என்று சொல்லுவார். அவர்கள் பாரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை யென்றும் சொன்னார். எவ்வளவு துக்கமான, பயத்தைத் தரத்தக்க வார்த்தைகளென்று பாருங்கள் !!.


தாங்கள் பாதுகாப்போடு இருக்கிறோம் என்று உணர்ந்த சிலரிடம், இயேசு ஏன் அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசுவார்? ஏனெனில் அவர்கள் அக்கிரமமான காரியங்களைக் கடைப்பிடித்தவர்கள். அதாவது பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தத்தின்படி அவர்கள் செய்யாதவர்கள்.

தேவன் சொல்லும் இப்படிப்பட்ட வசனங்களிலிருந்து, மனித உணர்வுகள் நாம் சார்ந்திருக்கக் கூடிய வழிகாட்டியோ அல்லது அளவுகோலோ அல்லவென்று முடிவு செய்கிறோம் !

தேவனுடைய வார்த்தைகள், அதிகாரத்தின் அளவுகோல் என்பதற்கு மாற்றான இந்தக் காரியங்கள் சம்பந்தமாக நாம் என்ன முடிவுக்கு வரமுடியும்? "காரியத்தின் கடைத் தொகையைக் கேட்போமாக! தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள். இது எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை" இது பிர 12:13-ல் கண்டுள்ளபடி தேவனுடைய முடிவாக இருக்கிறது. ஆவிக்குரிய நிலையில், அவரால் ஏவப்பட்ட வாத்தைகளடங்கிய வேதாகமம் மட்டுமே முடிவான அதிகாரத்தின் அளவுகோலாயிருக்கிறது.

வேதாகமத்தில், தேவன் நமக்கு என்ன சொல்லியிருக்கிறாரோ, அவைகளுக்கு நாம் திருப்பிப் போய், அதன்படி யோசிக்கவும், பேசவும், செயல்படவும் நாம் ஒவ்வொருவரும் செய்வோமாக !! அடுத்த மாதம் வேதாகமத்தின் ஒழுங்குபற்றி நாம் படிப்போம்.

**EZSR** **CHARLIE DIPALMA**



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
| --- | --- | --- | --- | --- |
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELGU | Monday<br>to Friday | 5.30-5.45 | Box. 80<br>Kalkinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45-7.00 p.m.<br>5.45-6.00 p.m.<br>5.30-5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560<br>084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45-4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sansrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghese |

## PLEASE WATCH

# ETC TV

**Every Sunday from 6.00 to 6.30 a.m.**

**for a Christian Programme in Hindi**

Please write to these address for Bible
Correspondence Courses,
Magazines and other Christian Litertures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WRP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annual Subscription Rs-30/-

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக்
கொள்ள விரும்புவோருக்கு**

## ஓர் இனிய செய்தி

**ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட
அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள்
விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.
இது 15 பாடங்களைக் கொண்ட**

**ஓர் இலவச பயிற்சி.**

**இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு
சான்றிதழ் வழங்கப்படும்.**

**பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம்.
தமிழ்நாடு. இந்தியா.




***Published by CHURCH OF CHRIST, Kangayam.***
***Printed at Konar Printers, Madurai - 625 012. Editor. S. Rajanayagam.***